www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# A முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

8C21

**நேரம்: 2.30 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்: 100**

பகுதி - 1

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:-** **7×1=7**

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) நீலகேசி கூறும் நோயின் வகைகள் ________
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

3) ஒன்றே ________ என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்
அ) குலம் ஆ) குளம் இ) குணம் ஈ) குடம்

4) பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் ________
அ) வலிமையற்றவர்கள் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

5) அயோத்திதாசர் நடத்திய இதழ் ________
அ) ஒரு பைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்
இ) அரைபைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

6) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ________
அ) இராதாகிருட்டிணன் ஆ) அம்பேத்கர்
இ) நெளரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

7) பறவைகள் ________ பறந்து செல்கின்றன
அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **4×1=4**

8) பொருளாதாரப் படிப்பிற்காக அம்பேத்கர் ________ சென்றார்
9) "மாங்கனி நகரம்" என்று அழைக்கப்படும் நகரம் ________
10) ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ________
11) எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________

**III. பொருத்துக.** **4×1=4**

| | | |
|---|---|---|
| 12) மதம் | - | மேன்மை |
| 13) நிறை | - | பொறுமை |
| 14) மையல் | - | கொள்கை |
| 15) பொறை | - | விருப்பம் |

*Shakthivel CDM*

பகுதி - 2

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:-** **5×2=10**

16) தமிழ் எங்குப் புகழ்கொண்டு வாழ்கிறது?
17) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?
18) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
19) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
20) விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
21) யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
22) திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?.
23) எது பெருமையைத் தரும்?

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:-** **5×2=10**

24) புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
25) 'பா' எத்தனை வகைப்படும்? அவை யாவை?
26) சான்றோர்க்கு அழகாவது எது?
27) கொங்குநாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
28) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?
29) நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?
30) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
31) வினைமுற்று என்றால் என்ன?

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com



பகுதி - 3

VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:- 5×3=15

32) நமக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.
33) வேற்றுமை அணி என்றால் என்ன? எ.கா. தருக
34) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
35) நோய்கள் பெருகக் காரணம் என்ன?
36) தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
37) 'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?
38) உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
39) இருவகை அசைகளை விளக்குக

பகுதி - 4

VII. அடிமாறாமல் எழுதுக:- 2+5=7

40) "சொல்" என முடியும் குறளை எழுதுக.
41) "உடலின் உறுதி" ....... எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடல் (அல்லது)
"ஓடிவந்து கைகுலுக்க" ............ எனத் தொடங்கும் இளைய தோழனுக்கு பாடல்

VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:- 2×4=8

42) ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
43) அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?
44) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

பகுதி - 5

IX. மொழிப்பயிற்சி வினாக்களுக்குத் தகுந்த விடைகளை எழுதுக:-

45) பொருள் தருக: 3×1=3
அ) முகில் ஆ) பண் இ) மையல்
46) சேர்த்து எழுதுக 3×1=3
அ) வானம்+அறிந்து ஆ) தாம்+இனி இ) இதம்+தரும்
47) பிரித்து எழுதுக 3×1=3
அ) போவதில்லை ஆ) சீவனில்லாமல் இ) கலனல்லால்
48) பழமொழிகளை நிறைவு செய்க 2×1=2
அ) கூடிவாழ்ந்தால் ________
ஆ) நோயற்ற வாழ்வே ________
49) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 2×1=2
அ) பால் ________ (குடி/பருகு)
ஆ) கோழி ________ (கூவும்/கொக்கரிக்கும்)
50) கலைச்சொற்களை எழுதுக. 2×1=2
அ) Epigraph ஆ) Charity

Shakthivel CDM

51) புதிய சொற்களை உருவாக்குக 2×1=2
அ) தேன் ஆ) சிட்டு இ) மலர் ஈ) குருவி
52) சொற்றொடரில் அமைத்து எழுதுக 2×1=2
அ) அணிகலன் ஆ) உடலும் உயிரும் போல
53) வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக. 2×1=2
அ) சென்றான் ஆ) வருக
54) தமிழெண்களை எழுதுக 2×1=2
அ) உனது வயது ________
ஆ) உன் வகுப்பு மாணவிகளின் எண்ணிக்கை ________

பகுதி - 6

X. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

55) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
56) அறிவுசால் ஔவையார்- என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

XI. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:- 1×6=6

57) "உழைப்பே உயர்வு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.
58) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டு கடிதம் எழுதுக

********

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com